மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உத்திரப் பிரதேசத்தி லிருந்து ஏற்கனவே வரவழைக்கப்பட்ட உருளைக்கிழங்குகள் மோச மானதாக வரவழைத்தார்கள், அதிலே சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டது. அதைப்பற்றிய முழு விவரங்களும் வேண்டுமானால், அதற்குத் தனிக் கேள்விபோட்டால், முழு விவரங்களையும் அளிக்க லாம்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இறக்கு மதி செய்யப்படும் உருளைக்கிழங்கு விதையானது மிகவும் குறை வாக இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு அர சாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது ஜெர்மன் நாட்டுடன் ஒரு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது, இண்டோ-ஜெர்மன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் கிட்டத்தட்ட நமக்கு இரண்டு கோடி ரூபாய் இலவசமாக அளிக்க இருக்கிறார்கள். அதன்மூலமாக நல்ல விதைகள், பொறுக்கு விதைகள், டிராக்டர் போன்றவை, இரசாயன உரங்கள் இவையெல்லாம் இலவசமாக அளிக்கப்படும். அப்படிச் செய்யும்பொழுது நீலகிரியில் உருளைக் கிழங்கு உற்பத்தி கணிசமாக ஏற்படும் என்பதை நான் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உருளைக் கிழங்கு விதைகளை வாங்கி விவசாயிக் குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அதை உபயோகப்படுத்துவதற்கு முன்பு அரசாங்கம் ஏதாவது பரிசோதனை நிலையங்கள் வைத்து அதாவது டெஸ்டிங் சென்டர்ஸ் வைத்து, அதிலே இவற்றை யெல்லாம் ஆராய்ச்சி செய்து, அட்வைஸ் கொடுப்பதற்கு அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது நீலகிரி யிலே அத்தகைய ஆராய்ச்சிகள் நடக்கின்றன; கோடைக்கான லிலும் நடக்கிறது. அதன்மூலம் நல்ல பொறுக்கு விதைகள் கொடுத்து வருகிறார்கள். 1961-ஆம் ஆண்டில் உற்பத்தியான 115 டன் முழுவதும் விதைக்காகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சர்க்கார் விதைப் பண்ணையிலே உற்பத்திசெய்து விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விதையிலே ஒன்றும் தகராறு இல்லை.

*Tuberculosis Eradication Programme*

* 262 *Q.*— THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there is any proposal to take active steps to reorganise the Tuberculosis Eradication Programme in the City; and

(*b*) whether the Government would consider the possibility of opening more diagnostic, therapeutic and peripheral centres?

*1967 ஜூலை 11]*

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) சென்னை நகரில் தற்போது திருத்தியமைக்கப்பட்ட உருக்கி நோய் ஒழிப்புத் திட்டம் ( Tuberculosis Eradication Programme செயல்பட்டு வருகிறது. பதினைந்து உருக்குநோய் ஆய்வு நிலையங் களும், சிகிச்சை நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்கள் ஆற்றும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தேவையானபோது, மேலும் உருக்கி நோய் ஆய்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, இந்த க்ஷயரோக வியாதி ஒரு பெரிய வியாதியாக இருப்பதால் க்ஷயரோக ஆஸ்பத்திரிகளில் க்ஷயரோக வியாதியஸ்தர்களுக்கு பெட் வசதிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு அவரவர்களுடைய முறை வரும்போதுதான் அவர்களுக்கு கார்டுகள் அனுப்பப்படுகின்றன. பெரும்பாலும் அந்த வியாதியஸ்தர் இறந்துபோன பிறகுதான் சிகிச்சைக்கு வர லாம் என்ற கார்டு வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனியாகிலும் அவர்கள் இறப்பதற்கு முன்னாலேயே வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதிகப்படி யான க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் சென்னையிலே ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் புகார் ஒன்றும் வரவில்லை. அவர்கள் ஆட்சியில் அப்படி இருந்திருக்கலாம், இந்த ஆட்சியில் அப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம்.

**மாவட்ட நகராட்சிகள் சட்டம்**

*263 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபை சட்டத்தை திருத்தும் விஷயம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) இந்த முயற்சி எந்த ஆண்டில் எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து, அதை மீண்டும் சட்டமாக இயற்றும்பொருட்டு முந்திய சட்டசபையில் தமிழ்நாடு 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதா (3—8—1966-ல்) கொண்டுவரப்பட்டது. இது குறித்து அச்சட்ட சபை நிறைவேற்றிய ஒரு பிரேரணையின்மேல், பொதுமக்கள் அம் மசோதா மீது தங்கள் கருத்துக்களை 31—10—1966-க்குள் தெரிவிப்பதற்காக அது தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளி யிடப்பட்டது. முந்திய சட்டசபை கலைக்கப்பட்டதன்மேல்,